# அன்னபூர்ணா ஃபைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்

ANNAPURNA FINANCE
GROWING TOGETHER

## நியாயமான நடைமுறை விதித்தொகுப்பு

அன்னபூர்ணா ஃபைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்டில் (Annapurna Finance Pvt. Ltd) நாங்கள் எங்கள் வாடிக்கையாளர்கள் அனைவரையும் நியாயமாகவும், நெறிமுறையோடும் பாரபட்சமின்றியும் நடத்துகிறோம். இந்திய ரிசர்வ் வங்கி (RBI) வழிகாட்டுதல்களின் படியுள்ள நியாயமான நடைமுறை விதித்தொகுப்பு (எஃப்பிசி (FPC)) நிர்வாகக் குழுவினரின் முன்பாக அவர்களின் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டு, ஒப்புதல் பெறப்பட்டு, பிறகு இது பிராந்திய மொழியில் அனைத்து அலுவலகங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. நியாயமான நடைமுறை விதித்தொகுப்பு விளக்கிக் கூறுவதாவது:

- கடன் வாங்குபவருடனான அனைத்துத் தகவல் தொடர்பும் பிராந்திய மொழியில் அல்லது கடன் வாங்குபவருக்குப் புரியும் மொழியில் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- விண்ணப்பத்தில் திட்ட விவரங்கள், தகுதி அளவுகோல்கள், கடனைத் திருப்பிச் செலுத்தும் கால வரம்பு, கட்டணங்கள் மற்றும் வட்டி விகித அமைப்பு, இணக்கத்திற்கான முக்கிய நிபந்தனைகள், எதிர்பாரா நிகழ்வுகள் போன்ற கடன் வாங்குபவர் நலனைப் பாதிக்கும் அனைத்து விவரங்களும் இடம்பெற வேண்டும்.
- மதிப்பீட்டிற்குத் தேவையான ஆவணங்களை விண்ணப்பம் குறிப்பிட வேண்டும்
- கடன் விண்ணப்ப செயலாக்க நேரத்துடன், அதனைப் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதல் ரசீது வழங்கப்பட வேண்டும்.
- ஐஆர்ஏசிபி (IRACP) சட்டங்கள் தொடர்பாக இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) சமீபத்திய வழிகாட்டுதல்களின் படி, தவணைத் தேதியைத் தாண்டி செலுத்தாத கடன் தொகையின் நிலையைக் கணக்கிடுவதற்கு எதுவாக, கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான சரியான நிலுவைத் தேதி, கடனைத் திருப்பிச் செலுத்தும் கால இடைவேளை, அசல் மற்றும் வட்டிக்கு இடையேயான பிரேக்அப், எஸ்எம்ஏ (SMA)/என்பிஏ(NPA) க்கான எடுத்துக்காட்டுகள் இவை அனைத்தும் கடன் ஒப்பந்தம் மற்றும் கடன் ஒப்புதல் கடிதத்தில் கடன் வாங்குபவருக்குப் புரியும் மொழியில் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.
- இந்திய ரிசர்வ் வங்கி (RBI) பரிந்துரைக்கும் நியமங்களின்படி இந்த நிறுவனம் அடமானமில்லாமல் குறுகடன் சேவைகளை குடும்பங்களுக்கு வழங்குகிறது. இங்கு ‘குடும்பம்’ என்பது தனிப்பட்ட ஒரு குடும்பத்தைக் குறிக்கும். அதாவது கணவன், மனைவி மற்றும் அவர்களின் மணமாகாத குழந்தைகள் அடங்கிய குடும்பத்தைக் குறிக்கும்.
- வாடிக்கையாளர்களின் குடும்ப வருமானம் குறித்த தகவல் கடன் தகவல் நிறுவனங்களுக்கு (சிஐசி-க்கள், CICs) உரிய முறையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- கடன் ஒப்புதலைக் கருத்தில் கொள்ளும்போது, ஒரு குடும்பத்தின் மாதாந்திர கடன் திருப்பிச் செலுத்தும் தொகை அந்தக் குடும்பத்தின் மொத்த மாதாந்திர வருமானத்தின் 50% தொகையை மீறக்கூடாது என்பதை நிறுவனம் உறுதி செய்கிறது.
- மாதாந்திர கடன் திருப்பிச் செலுத்துதல் கடப்பாடுகளைக் கணக்கிடும் போது, குடும்பத்தின் நிலுவையிலுள்ள அனைத்துக் கடன்களையும் (அடமானமில்லாத குறுகடன்கள் மற்றும் பிற அடமானமுள்ள வேறு ஏதேனும் கடன்கள்) நிறுவனம் பரிசீலிக்கும்.
- தற்போதுள்ள அனைத்துக் கடன்கள் (அசல் மற்றும் வட்டித்தொகை உட்பட) மற்றும் பரிசீலனையிலுள்ள கடன் ஆகியவை குடும்பத்தின் செலவுகளில் உள்ளடக்கப்பட்டு, அது குடும்பத்தின் மாதாந்திர வருமானத்தின் 50% ஆக வரம்பிடப்படும்.
- கடன் திருப்பிச்செலுத்துதல் காரணமாக குடும்ப மாதாந்திர வருமானத்தில் 50% க்கு மேலாக உள்ள செலவுகள் அத்துடன் ஏற்கனவே இருக்கும் கடன்கள் முடிவதற்கு அனுமதிக்கப்படும். இந்தக் குடும்பத்திற்கான கூடுதல் கடன்கள் விதிமுறையின்படி அதிகபட்ச 50% ஐ பூர்த்தி செய்யும்போது மட்டுமே வழங்கப்படும்.
- ஒரு கடன் வாங்குபவர் தனது கடன் கணக்கை வேறொரு நிறுவனத்திற்கு மாற்றுவதற்கான கோரிக்கையைச் சமர்ப்பித்தால், அத்தகைய கோரிக்கை பெறப்பட்ட நாளிலிருந்து 21 நாட்களுக்குள் நிறுவனம் அதன் ஒப்புதல் அல்லது ஆட்சேபனைகள் ஏதேனும் இருந்தால், அதைத் தெரிவிக்க வேண்டும். அத்தகைய எந்தவொரு பரிமாற்றமும் பொருந்தக்கூடிய சட்டங்களின்படி வெளிப்படையான ஒப்பந்த விதிமுறைகளால் நிர்வகிக்கப்படும்.
- நிறுவனமானது நிர்வாகக் குழு இயக்குநர்கள் அனுமதித்த குறுகடன் விலையிடல் கொள்கையை பின்பற்றுகிறது, அதில் பிற விஷயங்களுடன் கூடவே பின்வருபவையும் அடங்கும்:

I. அனைத்தும் உள்ளடக்கப்பட்ட வட்டி விகிதத்தைப் பெறுவதற்கு சிறப்பாக ஆவணப்படுத்தப்பட்ட வட்டி விகித மாதிரி/அணுகுமுறை
II. புறநிலை அளவுருக்கள் அடிப்படையில் ஒவ்வொரு கூறுகளின் அளவின் அடிப்படையில் நிதிச் செலவுகள், ஆபத்துப் பிரீமியம் மற்றும் மார்ஜின் போன்ற வட்டியின் கூறுகளை விளக்கிக் கூறுவது
III. கொடுக்கப்பட்டுள்ள பிரிவைச் சார்ந்த கடன் வாங்குபவர்களுக்கு ஒவ்வொரு கூறுக்கும் பல்வேறு விதமான பரவல் மற்றும்
IV. வட்டி விகிதம் மற்றும் குறுகடன்களுக்குப் பொருந்தும் பிற அனைத்துக் கட்டணங்களும்.

- ஏப்ரல் 15, 2024 தேதியிட்ட RBI சுற்றறிக்கையில் உள்ள "கடன்கள் மற்றும் முன்பணங்களுக்கான முக்கிய உண்மைகள் அறிக்கை (KFS)" குறித்த அறிவுறுத்தல்களுக்கு நிறுவனம் இணங்குகிறது.
- குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு வழங்கப்படும் அனைத்து வகையான கடன்களுக்கும் கடன்களின் விலையை விவரிக்கும் ஒரு உண்மைத் தாள் அல்லது முக்கிய உண்மை அறிக்கையை (KFS) வெளியிடுவதை நிறுவனம் உறுதி செய்கிறது.
- நிறுவனமானது குறுகடன்கள் மீது வசூலிக்கப்படும் குறைந்தபட்ச, அதிகபட்ச மற்றும் சராசரி வட்டி விகிதங்களை அதன் அனைத்து அலுவலகங்களிலும் (தகவல் சிற்றேடு/துண்டு வெளியீடுகள்) அதன் வலைத்தலத்திலும் விவரமாகக் காட்சிப்படுத்துகிறது.
- பின்வருபவற்றை உள்ளடக்கிய கடன் அட்டை ஒன்றை நிறுவனம் கடன் வாங்குபவருக்கு வழங்கும்:

I. கடன் வாங்குபவரை போதிய அளவு அடையாளப்படுத்தும் தகவல்.
II. விலையிடல் குறித்து எளிதாக்கப்பட்ட தகவல் தாள்.
III. கடனுடன் தொடர்புடைய பிற அனைத்து விதிமுறைகளும் நிபந்தனைகளும்.
IV. பெறப்பட்ட அனைத்து கட்டணங்களையும் கிளை பெற்றுக்கொண்டதற்கான ரசீது மற்றும் இறுதி விடுவிப்பு.
V. பொறுப்பு அலுவலரின் பெயர் மற்றும் தொடர்பு எண் உள்ளிட்ட குறைதீர்க்கும் வழிமுறையின் விவரங்கள்.
VI. கடன் வாங்குபவரின் எழுத்துப்பூர்வ முழு ஒப்புதலுடன் மட்டுமே பிற கடன் இல்லாத தயாரிப்புகள் ஏதேனும் இருந்தால் அதுவும், அத்தகைய தயாரிப்புகளின் கட்டண கட்டமைப்பும் கடன் வாங்குபவருக்கு வழங்கப்படும்
VII. கடன் அட்டையில் உள்ள அனைத்து பதிவுகளும் கடன் வாங்குபவருக்கு புரியும் மொழியில் இருக்கவேண்டும்.
VIII. சட்டம் மற்றும் சர்வதேச மரபுகளால் கட்டளையிடப்பட்டபடி, மாற்றுத்திறனாளிகளின் பாகுபாடு காட்டாமை மற்றும் உரிமைகள் குறித்த உணர்வூட்டலை பணியாளர் பயிற்சி உள்ளடக்கியது. உடல்/பார்வை குறைபாடுள்ள விண்ணப்பதாரர்கள் தொழில்முறை வசதிகளைப் பெறுவதற்கு உதவ பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. அத்தகைய விண்ணப்பதாரர்களுக்கான குறை தீர்க்கும் பணி தற்போதுள்ள வழிமுறைகளின் கீழ் உறுதி செய்யப்படுகிறது.

- நிறுவனமானது இந்திய ரிசர்வ் வங்கியின்(RBI) கேஒய்சி(KYC) இணக்கத்தை உறுதிசெய்கிறது
- வாங்குபவரின் தேவைக்கு ஏற்ப குறுகடன்களின் திருப்பிச் செலுத்துதல் காலத்தை மாற்றிக்கொள்வதை அனுமதிக்கிறது.
- கடன் வாங்குபவர்கள் கடனை திருப்பிச் செலுத்துவதற்கு போதுமான அளவு திறனை நிரூப்பித்திருந்து, மேலும் கடன் அவர்களை அதிக கடன்சுமை ஆபத்தில் ஆழ்த்தாமல் இருந்தால் மட்டுமே கடன் நீட்டிப்பு செய்யப்படும் என்பதை உறுதிசெய்ய நிறுவனம் நியாயமான நடவடிக்கைகளை எடுக்கும்.
- குறுகடன் வாங்குபவர்களிடம் வசூலிக்கப்படும் அனைத்துக் கட்டணங்களையும் நிறுவனம் வெளிப்படையாக தகவல் தாளில் தெரியப்படுத்தும். தகவல் தாளில் பிரத்யேகமாக குறிப்பிடப்படாத எந்தக் கூடுதல் கட்டணமும் குறுகடன் வாங்குபவரிடம் வசூலிக்கப்படுவதில்லை.
- வட்டி விகிதம் அல்லது பிற கட்டணங்களில் மாற்றம் ஏதேனும் இருந்தால் அது குறித்து நிறுவனம் கடன் வாங்குபவருக்கு முன்கூட்டியே தெரிவிக்கும் மற்றும் அத்தகைய மாற்றங்கள் எதிர்வரும் காலத்தில் மட்டுமே செயல்படுத்தப்படும்.
- நிறுவனம் பெற்ற அனைத்து கட்டணங்களையும் அதைப் பெற்றுக்கொண்டாதற்கான சரியான ரசீதை வழங்குவதை உறுதி செய்யும்.
- முன்கூட்டியே செலுத்துவதற்கோ அல்லது தாமதமாகச் செலுத்துவதற்கோ எந்தவித அபராதமும் கிடையாது, மேலும் எந்தவித பாதுகாப்பு வைப்புதொகையோ அல்லது மார்ஜின் தொகையோ குறுகடனுக்காக கடன் வாங்குபவரிடம் வசூலிக்கப்படுவதில்லை.
- ஏஎஃப்பிஎல் (AFPL) அதன் சம்பந்தப்பட்ட கிளைகளில் உள்ள ஊழியர்களின் தகாத நடத்தைக்கு அந்தக் கிளை மூலம் அதுவே பொறுப்பாகும் மற்றும் சரியான நேரத்தில் குறை தீர்த்து வைக்கப்படும். இது கடன் ஒப்பந்தத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது.
- கடன் வாங்குபவருடன் சேர்ந்து முடிவுசெய்யப்பட்ட நியமிக்கப்பட்ட /நடுவாக நியமிக்கப்பட்ட இடத்திலேயே கடன் வசூல் மேற்கொள்ளப்படும். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தொடர்ச்சியான சந்தர்ப்பங்களில் நடுவாக நியமிக்கப்பட்ட இடத்திற்கு கடன் வாங்குபவர் வரத் தவறிவிட்டால் மட்டுமே அவரது வீடு அல்லது அலுவலத்தில் கடன் வசூல் செய்ய களப் பணியாளர் அனுமதிக்கப்படுவார்.
- கடனை வசூலிக்கும் அதிகாரி தொகையை வசூல் செய்ய எந்த வித கடுமையான முறையையும் மேற்கொள்ளக்கூடாது, இது பொது பயன்பாடு மற்றும் புரிதலை கட்டுப்படுத்தாமல் கீழே வரையறுக்கப்பட்டுள்ளது:

I. மிரட்டும் அல்லது கடுமையான வார்த்தைகளின் பயன்பாடு
II. கடன் வாங்குபவரை தொடர்ச்சியாக அழைப்பது/ மற்றும் அல்லது அவரை காலை 9 மணிக்கு முன்பாக மற்றும் மாலை 6 மணிக்கு மேல் அழைப்பது
III. கடன் வாங்குபவரின் உறவினர்கள், நண்பர்கள் மற்றும் சக பணியாளர்களுக்கு தொல்லை தருவது
IV. கடன் வாங்குபவர்களின் பெயரை வெளியிடுவது
V. பயமுறுத்துவது அல்லது வன்முறையை பயன்படுத்துவது அல்லது அதேபோன்ற பிற வழிகளை கடன் வாக்குபவர் அல்லது கடன் வாங்குபவரின் குடும்பம்/சொத்துக்கள்/ நன்மதிப்பு ஆகியவற்றுக்குத் துன்பம் விளைவிக்க பயன்படுத்துவது
VI. கடனின் தவணைக் காலம் அல்லது திருப்பிச் செலுத்தாதனால் ஏற்படும் விளைவுகள் குறித்து கடன் வாங்குபவரைத் தவறாக வழிநடத்துவது

- கடன் வசூல் அல்லது பணியாளரின் நடத்தை தொடர்பாக கடன் வாங்குபவருக்கு எதேனும் குறைகள் இருந்தால், அவர் கிளை மேலாளர் அல்லது மண்டல மேலாளரை குறை தீர்ப்பது தொடர்பாக அணுகலாம். கடன் ஒப்புதல் நேரத்தில் கடன் வாங்குபவருக்கு அதிகாரிகளின் தொடர்பு எண் வழங்கப்படும்.
- நடத்தை விதிகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்களில் களப்பணியாளர்களுக்கு அபராதம் விதிப்பதற்கான விதியும் இருக்கிறது. முக்கியமானப் பகுதிகளில் நிறுவனத்தின் ஊழியர்கள் மட்டுமே பயன்படுத்தப்படுகிறார்கள், எந்த அவுட்சோர்ஸ் செய்யப்பட்ட கடன் வசூல் ஏஜெண்டுகளும் கடன் வசூலுக்குப் பயன்படுத்தப்படுவதில்லை
- களப் பணியாளர்களின் நடத்தை விதி தொடர்பாக நிறுவனத்தில் நிர்வாகக் குழு அங்கீகரித்த கொள்கைகள் நடைமுறையில் உள்ளன மற்றும் அவர்களைப் பணியமர்த்துவது, பயிற்சி அளிப்பது மற்றும் மேற்பார்வை செய்வது தொடர்பாக அமைப்புகள் உள்ளன.
- நிறுவனத்தின் நிர்வாகக் குழுவானது இந்திய ரிசர்வ் வங்கி (RBI) வழிகாட்டுதல்களின் படி நியாயமான நடத்தை விதித்தொகுப்புக்கான (இணைப்பு -1) இணக்கத்தை ஆண்டுக்கு ஒரு முறை மதிப்பாய்வு செய்யவே ண்டும்.
- வாடிக்கையாளர்களுடன் தொடர்புகொள்ளும் போது நிறுவனம் உயர்ந்த நெறிமுறைத் தரநிலைகளைப் பின்பற்றுகிறது, மேலும் ஊழலையும் வாடிக்கையாளர்களைத் தவறாக நடத்துவதை சரிசெய்யவும் போதுமான அளவு பாதுகாப்பு நடவடிக்கைகள் நடைமுறையில் உள்ளதை நிறுவனம் உறுதி செய்கிறது.
- நிறுவனமானது, நிர்வாகக் குழு இயக்குனர்கள் அங்கீகரித்தவாறு, குறைகளைத் தீர்க்கவும் மற்றும் ஒரு உயர் மட்டத்தில் அந்தக் குறைகள் தீர்க்கப்பட்டு முடிவடைவதை உறுதிசெய்ய நிறுவனத்திற்குள் பொருத்தமான குறைதீர்ப்பு வழிமுறையை (ஜிஆர்எம்-GRM) உருவாக்கியுள்ளது.
- குறுகடன் வாங்குபவர்கள் அவர்கள் பெற்றுள்ள கடன் தொடர்பாக அவர்களுக்குள்ள புகார்களைக் கையாள ஒவ்வொரு மண்டலமும் ஒரு மூத்த அதிகாரியை பொறுப்பு அலுவலராக நியமிக்கும்.
- இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) வழிகாட்டுதல்களின் படி, ஜிஆர்எம் (GRM) செயல்முறையானது பிராந்திய மொழியில் எங்களது ஒவ்வொரு அலுவலகத்திலும் முக்கியத்துவம் வாய்ந்த வகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது, அதில் நிறுவனத்தின் குறைதீர்க்கும் அதிகாரியின் (ஜிஆர்ஓ-GRO) மற்றும் இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) பிராந்திய அலுவலகத்தின் பொறுப்பு அதிகாரியின் தொடர்பு விவரங்கள் வழங்கப்பட்டிருக்கும்.
- குறைதீர்க்கும் வழிமுறையானது கடன் திருப்பிச் செலுத்துதல் தொடர்பான கஷ்டங்களை எதிர்கொள்ளும் கடன் வாங்குபவர்களை அடையாளம் கண்டு, அத்தகைய கடன் வாங்குபவர்களுடன் தொடர்பு கொண்டு நடப்பில் இருக்கும் உதவி குறித்த தேவையான வழிகாட்டுதல்களை அவர்களுக்கு வழங்குகிறது.
- பணியாளர்களுக்கான பயிற்சியின் நோக்கங்கள்:

I. வாடிக்கையாளர்களிடம் முறையாக நடந்துக் கொள்வது
II. குடும்ப வருமானம் மற்றும் குடும்பத்தில் ஏற்கனவே இருக்கும் கடன் குறித்த தேவையான விசாரணைகளை செய்வதற்கான வழிமுறைகள்
III. ஆவணப்படுத்தல் மற்றும் பட்டுவாடா செயல்முறை
IV. முரட்டுத்தனமான நடவடிக்கைலின்றி, குறிப்பிட்ட செயல்முறைகளின் மூலம் கடன் வசூல் செய்வது
V. கடன் வாங்குபவர்களின் குறைகளை உயர் அதிகாரிகளிடம் தெரிவிப்பது
VI. இந்தக் கொள்கை ஆவணத்தின் படி அனைத்து ஒழுங்குமுறை வழிகாட்டுதல்களுக்கும் இணங்குவது

- பணியாளர்களுக்கான் ஈடாக்க முறைகள், வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை மற்றும் கடன் வசூல் விகிதத்தை மட்டும் வலியுறுத்தாமல், சேவைப் பகுதிகள் மற்றும் கடன் வாங்குபவர் திருப்தியை அதிகம் வலியுறுத்துகிறது.
- இந்திய ரிசர்வ் வங்கியின் (Reserve Bank of India) வழிகாட்டுதல்களுக்கு இணங்கும் பொறுப்பை நிறுவனம் ஏற்றுக்கொண்டுள்ளது, மேலும் நிறுவனத்திற்குள் நியமிக்கப்பட்ட நபர்களுக்கு இணங்குவதற்கான பொறுப்பை வழங்குவதற்கும், அதை உறுதி செய்வதற்காக தணிக்கை மற்றும் காலமுறை ஆய்வு உள்ளிட்ட உள் கட்டுப்பாட்டு அமைப்புகளை நிறுவுவதற்கும் தேவையான நடவடிக்கைகள் நிறுவனத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.


**பதிவு செய்யப்பட்ட அலுவலகம்**
பிளாட் எண் 1215/1401, கந்தகிரி பாரி, ஜெயதேவ் வாடிகா எதிரில்,
PS/PO- கந்தகிரி, புவனேஸ்வர், ஒடிசா- 751030, கோர்தா, இந்தியா